# அம்மா 80



திருமதி. ராணிரத்தினம் ஜயரத்தினம்
அவர்களின்
80வது அகவைப் பூர்த்திச் சிறப்பிதழ்

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், ஐக்கிய இராச்சியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் கீதம்

(ஜன கண மன என்ற மெட்டு)

ஜய ஜய மாஜன ஜயசுப மாதா
ஜய ஜய மாஜன ஜயகே

கல்லூரித் தாபகர் கல்விக் கலைஞன்
துரையப் பாபுகழ் துதிப்போம்
மாண்புறு மகனாம் மகாஜன சிற்பி
ஜயரத்தினம் பணி நினைவோம்

வில்லுறு விளக்கு வியன்மறை எழுத்து
விளங்கிடு தாமரை உடையோம்
உனை நீ அறியென் றுரையை
நினைவுறு தொண்டிற் கண்டு
புனைமல ராகவே பெய்வோம்

வெல்லுக வெல்லுக மாஜன மாதா
வெல்லுக மாஜன தலைவர்
நல்காய் நல்காய் நல்காய்
நல்லறம் பொருளின்பம் நல்காய்
வெல்லுக மாஜன மாதா

புலவர் நா. சிவபாதசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா 80

திருமதி இராணிரத்தினம் ஜயரத்தினம் அவர்களின்
முத்துவிழா மலர்

வெளியீடு:

மகாஜனக் கல்லூரிப் பழையமாணவர் சங்கம்
ஐக்கிய இராச்சியம்
21. 04. 2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா 80

## முத்துவிழாக் காணும் இரத்தினம்

திருமதி இராணிரத்தினம்
ஜயரத்தினம் அவர்களின்
முத்துவிழா மலர்

**ஆசிரியர் குழு**
க. ஜெகதீஸ்வரன்
ப. வை. ஜெயபாலன்
நா. சபேசன்

**வடிவமைப்பு**
நா. சபேசன்
க. ஜெகதீஸ்வரன்

**அட்டை அமைப்பு**
கே. கே. ராஜா

**அச்சுப்பதிப்பு**
**Setline Data Ltd**
61 Ewer Street, London S.E.1

**வெளியீடு**
மகாஜனக் கல்லூரிப் பழையமாணவர்
சங்கம் (ஐ.இ)

**13 Arcus Road**
**Bromley**
**Kent**
**BR1 4NN**

திருமதி இராணிரத்தினம் ஜயரத்தினம் அவர்கள் தமது முத்து விழாவை இவ்வருடம் காண்கிறார் எனும்போது அந்த அன்னையின் புதல்வர்களாகிய மகாஜன மாணவர்கள் பெருமகிழ்ச்சி அடைகிறார்கள்.

பல்லாயிரம் மாணவர்களை நன்மனிதராக்கிய பெருமை மகாஜனக் கல்லூரியையே சாரும். தந்தை நிறுவிய பாடசாலையைத் தம் சிந்தையிருத்தி ஒரு பெருங் கல்லூரியாக வளர்த்தவர் அமரர் அதிபர் திரு ஜயரத்தினம் அவர்கள். Some are born great, some achieve greatness and some have greatness thrust upon them என்பர் ஓர் ஆங்கிலக் கவி. அதிபரை இதிலே இரண்டாவது ரகம் எனலாம். செயற்கரிய சாதனைகள் பல செய்து தெல்லிப்பழைக் கிராமத்தில் கல்வியும் சைவமும் தழைக்கத் தமது வாழ்நாளை, வளத்தை அர்ப்பணித்தார் என்றால் மிகையாகாது.

அன்னார் இத்தனையையும் செய்ய இசைவாய், அவருடைய சக்தியாய் இருந்தவர் அவருடைய இல்லக்கிழத்தி திருமதி இராணிரத்தினம் அவர்கள். தொல்லைகள், பிரச்சினைகள், தடைகள் என்று வழியில் வந்த அனைத்தையுந் தாண்டி ஒரு சமூகம் வளர உழைத்த பெருந்தகைக்கு உறுதுணையாக இருப்பது இலகுவான விடயமல்ல. மனஉறுதி, தளாராமை, துணிவு போன்ற நற்பண்புகள் நிறையவே வேண்டும். அந்த வகையில் அன்னை ஓர் இரத்தினமாகவே மிளிர்கிறார். மாவை ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ ஷண்முகநாதக் குருக்கள் அம்மாவை நினைந்து அவரது பிறந்தநாளில் சகஸ்ரநாம அர்ச்சனை செய்தும் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்திலிருந்து துர்க்காதுரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பிரசாதம் அனுப்பியும் அன்னையின் மீதான அன்பை வெளிப் படுத்தினார்கள்

இவ்வருடம் ஏப்பிரல் மாதம் முதலாந்திகதி அன்னை தமது எண்பதாவது வயதை எட்டியுள்ளார்கள். ஆயிரம் பிறைகண்ட அன்னை மேன்மேலும் பல்லாண்டு வாழ இறையருள் வேண்டி இறைஞ்சி நிற்கிறோம். அன்னாரின் இந்தத் திருநாளின் நினைவாக இம்மலரை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

இம்மலரை வெளியிடுவதற்கு கட்டுரைகள் கவிதைகள் எழுதி அனுப்பிய அனைத்து அன்பர்களுக்கும் எமது நன்றி உரியது. இலங்கையிலிருந்து விடயங்களைச் சேகரித்து அனுப்பிய மயிலங்கூடலூர் திரு பி நடராசன் அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

*ஆசிரியர் குழு*

ஓம் நமசிவாய



கல்லூரியில் எழுந்தருளியிருக்கும் சிவகாமி சமேத ஆனந்தநடராஜப்பெருமான்

குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யா / மகாஜனக் கல்லூரி**
**தெல்லிப்பழை**
**J / Mahajana College, Tellippalai**

Principal:
**Mr. P. Suntharalingam** B.Sc (Cey), Dip. in. Ed. (Cey)

Deputy Principal:
**Mr. S. Rajakulendiran** B.A. (cey), Dip. in. Ed (Cey)

# கல்லூரி அதிபரிடமிருந்து.....

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் சிற்பியும் சிறந்த சமூகத்தொண்டனுமாகிய அமரர் ஜயரத்தினம் அவர்களின் அன்பு மனைவியார் திருமதி இராணிரத்தினம் ஜயரத்தினம் அம்மையாரின் 80ஆவது பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு வாழ்த்துச்செய்தி அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். திரு ஜயரத்தினம் அவர்கள் மகாஜனக் கல்லூரியைக் கட்டி எழுப்புவதற்கு உறுதுணையாக இருந்தவர் அவரின் பாரியார் திருமதி இராணிரத்தினம் என்பதை எவரும் மறுக்கமுடியாது. அம்மையார் அவர்கள் தமது கணவர் ஈடுபட்டுழைத்த அனைத்துத் துறைகளிலும் அவருக்குப் பக்கபலமாக இருந்து ஊக்கமும் ஒத்துழைப்பும் வழங்கினார்.

அம்மையாரின் பிறந்தநாளைக் கொண்டாடுவதில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் கடல்கடந்த நாட்டிலிருந்து எடுத்துவரும் அரும்பணியை எங்கள் கல்லூரிச் சமூகம் சார்பில் பாராட்டுகிறேன்.

எல்லாம்வல்ல சிவகாமிசமேத ஆனந்தநடராஜப்பெருமான் அருளால் இவ்விழா சிறப்புடன் நடைபெறவும், திருமதி இராணிரத்தினம் ஜயரத்தினம் அம்மையார் அவர்கள் இன்னும் பன்னெடுங்காலம் சிறப்பாக வாழ்ந்து பலவருடகாலம் இடப்பெயர்வின்பின் சொந்த இடத்தில் இயங்கும் மகாஜன மாதாவின் உன்னத வளர்ச்சியைக் கண்டு களிக்கவேண்டுமென வாழ்த்துகிறேன்.

பொ. சுந்தரலிங்கம்
11. 03. 2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முத்துவிழா நாயகி திருமதி இராணிரத்தினம் ஜபரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாஜனக்கல்லூரிப் பழையமாணவர் சங்கம் (ஐ.இ)
## MAHAJANA COLLEGE OLD STUDENTS ASSOCIATION (UK)

### தலைவரின் வாழ்த்துரை

"மகாஜன" என்ற மனங்கவர் நாமம் இன்று உலகெங்கும் ஒலிக்கிறது. துள்ளித்திரிந்த பள்ளிப் பருவ நாள்களை எண்ணிக் குதூகலிக்கும் எவரும் எங்கிருந்தாலும் தாம் பயின்ற பள்ளியை மறக்கமாட்டார்கள். இத்தகைய பசுமை நினைவுகளைக் காவி மகிழ்வோர் ஒருங்கிணைந்து சந்திக்கும் கூடாரங்களாக பழைய மாணவர் சங்கக் கிளைகள் எங்கும் முளைவிட்டுப் படர்ந்துள்ளன.

எளிமையும் பசுமையும் நிறைந்த எமது கிராமங்களை அயலவர் நண்பர் உறவினர்களே அதிபர், ஆசிரியர், மாணவர்களாக விளங்கிய மகாஜன சமூகத்தைச் சார்ந்தவர்கள் நாம் என்ற பெருமிதம் எமக்குண்டு. வானுயரும் புகழோடு மகாஜனாவை வளர்த்த அமரர் தெ.து. ஜயரத்தினம் அனைவர் மனங்களிலும் அழியா மதிப்போடு நிலைப்பவர். அவருடைய குடும்பம் மகாஜன சமூகத்தின் முக்கிய பங்காளிகள். அதிபரின் முழுநேர உழைப்பும் கல்லூரிக்கு உரித்தாகக்கூடிய வகையில் குடும்பப் பின்புலத்தை இயக்கிய அம்மா திருமதி இராணிரத்தினம் ஜயரத்தினம் அவர்களின் பங்களிப்பு மகாஜன வளர்ச்சியில் காத்திரமானது; மறக்க முடியாதது.

அவரது எண்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதில் எமது சங்கம் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறது. அன்னாரை வாழ்த்தக் கிடைத்த இவ் வாய்ப்பைப் பெரும் பேறாகக் கருதுகிறோம்.

எம் மத்தியில் இன்று வாழ்ந்து இலண்டன் கிளையின் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் வந்து ஒத்துழைக்கும் அவருக்கு நற்சுகம் நிறைந்த நீடித்த வாழ்வு நிலைக்க இறைவனை இறைஞ்சுகிறோம்.

வைத்தீஸ்வரன் தயாவன்
21. 04. 2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்லூரித் தாபகர், அன்னையின் மாமனார்
பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்
# MAVIDDAPURAM KANTHASWAMY TEMPLE

மஹாராஜஸ்ரீ
சு. து. ஷண்முகநாதக் குருக்கள்
ஆதீனகர்த்தா - பிரதம குரு
மாவையாதீனம்
மாவிட்டபுரம்
தெல்லிப்பளை

*Maharajasri*
**S. D. Shanmuganatha Kurukkal**
Governing Authority - Chief High Priest
Mavai Aadheenam
Maviddapuram
TELLIPPALAI

## ஆசியுரை

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான் - மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு

கலைக்கடவுள் நாமகளது வாழ்விடம் நான்முகன். நான்முகன் கற்றோரது அதரத்தினடத்தே உள்ளராயினும், தாமரையில் வீற்றிருப்பினும், கற்றோரது தகைமைக்கு ஒப்பாகமாட்டார். ஏனெனில் நான்முகன் படைக்கும் உடம்பு அழிந்துவிடும். ஆனால் புலமை மிக்க கற்றோரது ஆக்கங்கள் அழியாமல் என்றும் நிலைத்து நிற்கும்.

மகாஜனக் கல்லூரி T. T ஜயரத்தினம் என்றால் இலங்கை முழுவதும் அவர் யாரென அறிந்துவிடும். கல்வி அபிவிருத்தி, சமய சமூக சேவைகள், ஆதரவற்றோர்க்கு உதவி நிற்றல், இப்படி இப்படியே தனது உடல் பொருள் ஆவி அனைத்தையும் இப் பூவுலகின் மாட்சிமைக்காக அர்ப்பணித்த பெருந் தியாகி அவர்.

அவரது தர்மபத்தினியோ மிகுந்த அமைதியோடு கணவனுடைய செயற்பாடுகளுக்கு உடனின்று ஆற்றுப்படுத்துவார். குசேலரின் மனைவி சுசீலைக்கு ஒப்பானவர். சில தர்மங்கள்தான் வாழ்க்கைக்கு உந்துசக்தியென எண்ணி அதற்கேற்ப வாழ்வை மேற்கொண்டவர் திருமதி இராணிரத்தினம் ஜயரத்தினம் அவர்கள். மாவைக் கந்தன்மேல் அபார பத்திபூண்டு பிரதி வெள்ளிக்கிழமை தோறும் கைநிறைய வாசனை மிகுந்த மலர்களோடு உஷத்காலப் பூசை தரிசனத்துக்கு வருகை தருவர். இருவரும் ஓரிடத்திலிருந்து உலக க்ஷேமத்துக்காக மௌனமாகப் பிரார்த்திக்கும் காட்சி இன்றும் நினைவில் வருகிறது.

திருமதி ஜயரத்தினம் அவர்கள் மாண்பு, அடக்கம், இன்முகம், மௌனம் என்றெல்லாம் நீதி நூல்களிலே தரப்பட்ட குணங்களின் சாயலில் வாழ்ந்ததாலேதான் தமது எண்பதாவது பிறந்தநாளை எதிர்நோக்குகிறார். அம்மையாரது தூய்மையான வாழ்வு இன்னும் நீண்ட ஆண்டுகளுக்கு வளரவேண்டுமென 2000. 04. 01 ஆன அவரது பிறந்த தினத்தன்று மாவைக் கந்தனது திருவடியில் 1008நாம அர்ச்சனைகளால் அர்ச்சித்து அவர் சார்பாக அவரது க்ஷேமங்களுக்காகப் பிரார்த்திக்கிறேன்.

நல்லவர்களாலேதான் உலகமும் உய்யும்.

அம்மையார் நீடூழி வாழவேண்டுமென யான் ஆசீர்வதிக்கிறேன்.

மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள்
05. 03. 2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றித் திருமகன் ஆனாய் நீயே



## தெல்லிப்பழை, மகாஜனக் கல்லூரி
## நவசிற்பி அமரர். தெ. து. ஜயரத்தினம் B. A., J. P.

பழைய மாணவர் செலுத்தும்

# அஞ்சலி

**அன்னையின் கணவர், மகாஜனச் சிற்பி**
**அமரர் தெ. து. ஜயரத்தினம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி
# பழையமாணவர் சங்கம் - கொழும்புக் கிளை

## திருமதி இராணிரத்தினம் ஐயரத்தினம் - 80ஆவது பிறந்தநாள் விழா
## வாழ்த்துச்செய்தி

தெல்லி நகரில் செந்தமிழ்ப் பாவலர்
வல்ல துரையப்ப வள்ளல் வைத்த
வெல்லும் மக்கள் வளர்கல் லூரி
மங்களப் புகழ்பெறு மகாஜன வாக
திங்கள் போலத் திசைதொறும் விளங்க
தந்தை வழியில் தனையனும் முயல
வெல்லும் மகாஜன வீறு கொண்டதே
செயல்மிகு அதிபர் ஐயரத் தினத்தின்
அயரா உழைப்பால் ஆயிரம் ஆயிரம்
உயர்வுறு மாணவர் உலகம் வியக்க
வேற்று நாட்டிலும் வெற்றி கண்டனர்
புலம்பெயர் வாழ்வும் புத்துயிர் அளிக்க
நிலம்பெயர் கல்லூரி நீடு வாழப்
பழைய மாணவர் பண்பொடு கூடி
வனப்புடன் சங்கம் வடிவுற அமைத்தனர்
தெல்லிநகர் கொழும்பு துறைநகர் தம்மொடு
மீன்பாடு நகராம் மட்டக் களப்பு
மேலாம் இலண்டன் மேவு ஜேர்மனி
பேசு பிரான்சு பெருந்தனக் கனடா
நாடும் சமாதான நாடாம் நோர்வே
அணைத்திடு கண்டம் அவுஸ்திரே லியாவும்
ஆதரவாய்ச் சங்கம் அமைத்து நின்றிட
சிறிய விதையில் சீறி எழுந்த
பெரிய ஆல விருட்ச மதனது
அரிய விழுதுகள் இவைதாம் அன்றோ!
அனைத்தும் கண்டு ஆதரவு தந்து
ஈன்ற பொழுதிற் பெரிது உவந்து
சான்றோர் மகாஜனர் தாயென
அன்பும் பண்பும் என்றும் நிறைந்த
அம்மணி யொருவர் அணிநகர் இலண்டன்
செம்மனச் செல்வி சீருடன் இன்று
புத்தா யிரமாண்டில் புத்திரி புத்திரர்
பெற்ற பேறாய்ப் பெருமை மிளிர
ஏப்பிரல் ஒன்றில் ஏத்திட அகவை
எண்பதை எட்டிய எழிலார் நாளும்
பிறந்த நாளாய்ப் பெற்றிடும் அம்மை
அமரர் ஐயரத்தினம் அருமை மனைவி
இராணி ரத்தினம் ஐயரத்தினமே
அன்னார்,
பெற்ற பிள்ளைகள் பேர்பெறு நல்ஜெய
பவானி சீர்ஜெய குமாரன் தம்மொடு
உற்றஜெய காந்தன் உடன்ஜெய வாணி
பெற்ற தவமெனப் பேணி வாழ்த்த
மற்ற மக்களாய் மலர்ந்த பழைய
மாணவர் தம்மொடு மாண்புறு கொழும்பு
வாழ்ந்திடு பழைய மாணவர் நாமும்
வாழ்த்துவோம் மங்கள வாழ்த்தும் தந்தே
வாழிய அம்மையே வாழ்வும் வளமும்
ஆயுளும் பெருக அருள்க திருவருள்
ஊழி தோறும் சேவை
உலகம் கண்டு உவந்து போற்றவே

**சி. சிவபாஸ்கரன்**
தலைவர்
தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி பழையமாணவர் சங்கம் கொழும்புக் கிளை

ஆக்கம்: பன்மொழிப்புலவர் த. கனகரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகாஜனக்கல்லூரி பழையமாணவர் சங்கம் — பாரிஸ்**

**ASSOCIATION DES ANCIENS ELEVES DU COLLEGE MAHAJANA - PARIS**

# வாழ்த்துச்செய்தி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தமது 80ஆவது வயதினை நிறைவு செய்யும் எம் பெருமதிப்புக்குரிய திருமதி இராணிரத்தினம் ஜெயரத்தினம் அவர்களுக்கு பிரான்ஸ் வாழ் மகாஜன பழையமாணவர் சார்பிலான வாழ்துக்கள்.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்

என்னும் வள்ளுவன் வரிகளை மெய்ப்பித்து வாழ்ந்துவரும் இராணிரத்தினம் அம்மா அவர்களே மகாஜன சிற்பி என எம்மால் அன்பாக அழைக்கப்படும் அமரர் திரு ஜயரத்தினம் அவர்களின் வெற்றிக்குப் பின்னால் இருந்த பெண் இரத்தினம் என்று கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

அவர் மேலும் பல வருடங்கள் வாழவேண்டும் என இறைவனை வேண்டி மீண்டும் எமது சங்கத்தின் சார்பிலான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அ. ஜெயக்குமார்
தலைவர்
ம.க.ப.மா. சங்கம்,பிரான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாஜனக்கல்லூரிப் பழையமாணவர் சங்கம் (கனடா)
## MAHAJANA COLLEGE OLD STUDENTS ASSOCIATION (CANADA)

### வாழ்த்துரை

மகாஜனக் கல்லூரி அதிபராக அமரர் திரு தெ.து. ஜயரத்தினம் அவர்கள் பொறுப்பேற்ற ஆரம்ப காலம் அது. 'T' வடிவக் கட்டடத்தில் சில வகுப்பறைகளுடன் திகழ்ந்த மகாஜனா வளரத் தொடங்கிய நிலை. ஒவ்வொரு படிமுறையாக அதிபர் திட்டமிட்டு உற்சாகமாக மகாஜனாவை உயர்த்த ஓயாது உழைத்தார். மலேசியா, சிங்கப்பூர் என்று சென்று நிதி சேகரித்தமையும், ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்து நான்கில் களியாட்ட விழாவை நிதிசேகரிப்பும் மன நிறைவும் ஒருங்கு சேரக்கூடிய வகையில் நடத்தியமை, ஒவ்வொன்றாகக் கட்டடங்கள், கோயில், தொழிற்கூடங்கள், விளையாட்டு மைதானம் ஆகியவை உருவானமை, ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபதாம் ஆண்டுப் பொன்விழா எல்லாம் என் நினைவுக்கு வருகின்றன.

இக் காலங்களில் அதிபரோடு ஒன்றி நின்று உழைத்தோர்களில் என் பேரனார் தம்பு உபாத்தியாயரும் ஒருவர். என் பேரனுடனே பள்ளிக்கப் போய்வரும் நான், அதிபரும் முக்கிய ஆசிரியர்களும் நாளாந்தம் மாலை ஆறு மணிவரை பாடசாலையில் நின்று உழைப்பதைப் பார்த்திருக்கிறேன். சனி ஞாயிறு என்று விடுமுறையே இல்லாமல் கல்லூரியில் பணிபுரிந்ததை அறிந்திருக்கிறேன்.

காரில் அதிபரோடு வீடு திரும்பப் பிள்ளைகளும் காத்திருப்பார்கள். அதிபரின் குடும்பத் தலைவியாகச் செய்யவேண்டிய பணிகளோடு கல்லூரி சம்பந்தமாக அன்றாடம் அதிபரிடம் வருவோரை வரவேற்றுப் பதில் கூறும் கடமையும் அம்மா திருமதி இராணிரத்தினம் ஜயரத்தினம் அவர்களைச் சாரும். அதிபரின் முழு உழைப்பும் கல்லூரியைச் சுற்றி நிற்க குடும்பத்தைப் பற்றி நின்று கல்லூரியோடும் ஒன்றி நின்று அதிபருக்குச் சகல வகையிலும் பூரண ஒத்துழைப்புத் தந்த இராணியம்மையாரின் சேவை திரைக்குப் பின்னால் நிறைய நடந்தன. வெளிப் பார்வையில் அதிபரின் சாதனைகளுடன் ஒன்றி வியாபித்தவை அவை. கல்லூரிக்குப் பல்வகையிலும் உழைத்த திருமதி இராணிரத்தினம் அம்மா அவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்தின்போது அவரை வாழ்த்துவதிலும் இலண்டன் கிளையைப் பாராட்டுவதிலும் மகிழ்ச்சியடைகின்றேன். அம்மாவுடன் சேர்ந்து இயங்க வாய்ப்புப்பெற்ற இலண்டன் மகாஜனன்கள் பாக்கியசாலிகள்.

வைத்தீஸ்வரன் ரஞ்சன்
தலைவர்

21.04.2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

# Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka.

திகதி : 03/03/2000

## திருமதி இராணிரத்தினம் ஐயரத்தினம் அவர்களின் முத்துவிழாவை (80வயது) முன்னிட்ட வாழ்த்துரை

தெல்லிப்பழைக் கிராமத்தை கல்விச் சிந்தனையினாலும் சைவ மலர்ச்சியினாலும் பண்பாட்டு உயர்வினாலும் உலகறியச் செய்த பெருமையில் முக்கியபங்கு மகாஜனச் சிற்பி திரு.தெ.து ஜயரத்தினம் அவர்களுக்கு உண்டு. மேலும் இந்தச் சேவையில் முக்கிய பங்களிப்புக்கு உரியவர் திருமதி இராணிரத்தினம் என்று கூறுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

"மனைத்தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை."

வள்ளுவப் பெருமானின் இக் குறட்பாவுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் இவ்வம்மையார் என்பது முற்றிலும் உண்மை. தெல்லிப்பழைக் கிராமத்தை அணி செய்த மகத்துவம் வாய்ந்த குடும்பம் இவர்களுடையது. கல்விச் சிந்தனையும், கல்லூரியின் மகத்தான உயர்வும், மாணவர்களின் கல்வி மேம்பாடும் இக் குடும்பத்தவர்களின் குறிக்கோளாக அமைந்தமையை நான் நன்கு அறிவேன். ஆயிரமாயிரம் நன் மாணாக்கர்களை இந்நாட்டுக்குப் புலமையாளர்களாக வெளிக்கொணர்ந்த பெருமை மகாஜனக் கல்லூரிக்கு உண்டு. அன்றும் இன்றும் முதற் தரமான இடத்தைக் கல்வி உலகில் இக்கல்லூரி பெற்று வருகிறது. இதற்கு வித்திட்ட பரம்பரையில் வந்து உதித்தவரே திருமதி இராணிரத்தினம் அவர்கள். மாமனார் பாவலர் துரையப்பா பிள்ளையினதும் கணவனார் மகாஜன சிற்பி தெ. து ஜயரத்தினம் அவர்களினதும் கல்விச் சிந்தனையை முன்வைத்து அவர்கள் பின்னே நின்று அரும்பணியாற்றிய சிறப்பு இவ்வம்மையாருக்கு உண்டு.

எனவே யாழ்ப்பாண மண்ணில் கல்விப் பாரம்பரியத்தில் என்றும் எமது வாழ்த்துக்கும் பாராட்டுக்கும் உரியவராக விளங்கிக்கொண்டிருக்கிற அம்மையார் இராணிரத்தினம் அவர்களை இந்த எண்பதாவது அகவையில் வாழ்த்தி மகிழ்வதில் நான் பூரிப்படைகிறேன். அம்மையாரின் பிள்ளைகள், பேரர்கள், மற்றும் அனைவரும் துர்க்கை அம்பாள் திருவருள் பெற்று மேலும் நீடூழி வாழ்வார்களாக என்று வாழ்த்தி அமைகின்றேன்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைமாட்சிமிக்க மாதரசிக்கு வாழ்த்துக்கள்

மகாஜன மைந்தர்களின் அன்னையென்று போற்றத்தக்க மாண்புடைய திருமதி இராணிரத்தினம் ஜயரத்தினம் அவர்களுக்கு அகவை எண்பது நிறைகின்றது. அவர் நடந்துவந்த பாதையைத்திரும்பிப் பார்க்கிறேன்.

மண்ணிற் பிறக்கின்ற மாந்தர் எல்லோரும் பெயர் பெற்று வாழ்வதில்லை. புகழோடு வாழ்பவர் சிலர், அப்புகழுக்கே உரமாக உறுதுணையாக அமைபவர்கள் சிலர். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கும் பின்னால் ஒரு பெண் காரணமாய் இருப்பாள் என்பார்கள். மகாஜனச் சிற்பியின் மாண்புறு புகழுக்குக் காரணனமானவர் இவரே என்றால் அது மிகையானதல்ல.

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்பது வள்ளுவர் வாக்கு. இவ் வாக்குக்கு எடுத்துக்காட்டாய் வாழ்வுச் சுடராய்த் திகழ்ந்தவர் இவர். இன்சொல்லன்றி இன்னாதது பேசி அறியார். அடக்கம் அவரது அணிகலனாகும். பெண்மைக்குரிய மென்மையும் இனிமையும் பொறுமையும் இவரிடம் நிறைந்து காணப்பட்டன. இத்தகைய சிறப்புக்கள் நிறைந்த இவர் இல்லறத்தை இனிதுற நடத்தியதாலேயே திரு ஜயரத்தினம் அவர்கள் சமூகப்பொதுப் பணிகளில், குறிப்பாகக் கல்வித்துறையில் சிறந்த சேவை ஆற்ற முடிந்தது. மகாஜன மாதாவை உன்னத நிலைக்குக் கொண்டுசெல்ல முடிந்தது. சமூகத்தில் ஏறுபோல் வீறுநடை போட முடிந்தது. அந்தப் பெருமையில் நிறைவுகண்டு பின்னணியில் மௌனமாய் நின்றவர் இவர்.

நாட்டுச் சூழ்நிலை காரணமாக தொலைதூரத்தில் வாழவேண்டிய நிலை இவருக்கு ஏற்பட்டது. இவர் பெற்ற நான்கு புத்திரர்களில் கண்ணன் மட்டும் இங்கு எம்முடன் வாழ்கின்றார். இவரது நிழலாகக் கண்ணனைக் கண்டு நிம்மதி கொள்ளுகின்றோம்.

இன்று அவரைக் காண அவல் உந்தியபோதும் இயலா நிலையில் இங்கிருந்து வாழ்த்துகின்றோம். விழுதுகளாகப் பிள்ளைகள் தாங்கி நிற்க, இன்னும் பல ஆண்டுகள் நிறைவோடு வாழத் துர்க்கை அம்மனின் அருளை வேண்டுகின்றேன்.

**திருமதி கனகேஸ்வரி சின்னத்தம்பி**
**இளைப்பாறிய ஆசிரியர்**
**இலங்கை.**
04. 04. 2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதல்வி ஜெயபவானி விக்னேஸ்வரன் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Fortunate Wife of a Historic Figure

**Mrs. M. Thurairajah**
**Retired Teacher, Mahajana college**

It is with immense pleasure, that I send this message to the souvenir that is being published in connection with the 80th Birthday of Mrs Rani Jayaratnam.

It fills my heart with joy to write this on this occasion, not because I am an ex-teacher of Mahajana College but because I am a close associate and friend of Mrs Jayaratnam.

To me, Mrs. Rani Jayaratnam or as my husband, my children and all of us call her, "Principal Mamy" was more than a sister. She was my confidant, a true sincere friend and a good counsellor.

To write about Mrs. Jayaratnam, I am only reminded of our late Principal, Mr Jayaratnam, at college functions with his smooth shining wavy haired head held high, his dignified figure towering above all others, a warm genial smile lighting up his face, with his humble modest cute and petite wife - Mrs Rani Jayaratnam - almost always beside him walking graciously up to the College Hall or Open Air Theatre, accompanying the Guests of Honour.

Mrs Jayaratnam, with her hidden qualities, unseen or unknown can be grouped as one of the greatest personalities among women.

As a devoted wife, she was a guiding light and a tower of strength to our late Principal, going through his hard life on earth with confidence.

God has blessed her with a lot of calmness, patience and tolerance. She rarely gets excited over anything. She is a kind, stable and well-balanced lady. She does everything with gentleness and enthusiasm.

She is an amiable devoted and dedicated mother. She dedicated her life relentlessly to uplift her family. She never squandered time. Her workload was always heavy, with our late Principal's College and Social engagements as well as her children's studies and household duties. She would be seen with our late Principal at the weddings, funerals, house warming ceremonies etc of all the teachers, parents, past pupils and others associated in one way or another with the College. With all these activities she spent her little time of leisure gardening, knitting and sewing.

In addition to all these great qualities, God has endowed her with the four -fold worldly blessing of long life, good health & personality, happiness & comfort and strength & power.

To have known her and associated with her and her family was indeed an enriching experience to our family.

As for her beloved husband -late Mr Jayaratnam (TTJ), to pay a tribute, as he well deserves, he will be evergreen in our memories.

My sincere thanks go to the committee of the Old Students Association -UK which is part and parcel of the Big Mahajana family, for giving me this opportunity to write this message.

May Mrs Rani Jayaratnam live long healthily, happily and peacefully in the midst of her children and grand children.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துவிழாக் காணும் ரத்தினமே வாழ்க!

செயற்கரிய செய்த அதிபர்*ஜய ரத்னம்*
மனைக்கிழத்தி மாண்புநிறை மாதரசி – மா*ராணி*
*ரத்ன*மெனும் அன்னை அவனிமிசை வாழ்ந்திடுநாள்
*முத்துவிழா*க் காணுகிறார் இன்று.

செந்நெற் கழனிமிசை சீர்பூத்த பழமரங்கள்
என்றும் நலங்கொழிக்கும் எழிலார்ந்த தெல்லிநகர்
சந்தக் கவியிசைத்த சான்றோனாம் *துரையப்பா*
சிந்தைக் கருவுதித்த சீர்நிறைமா ஜனக்கழகம்

மாஜனமா நற்கழகம் மாண்புயர நாள்தோறும்
நேசமுடன் உழைத்துவந்து நீழுலகிற் புகழோடு
பாசமுடன் அதிபரெனப் பலரழைக்க வாழ்ந்தவனின்
பாசமிகு நன்மனையாய்! பாங்குறவே பணியாற்றி

பணியாற்றி இந்நிலத்தில் பாசமுடன் உலகுக்கு
அணிசெய்ய நற்பிள்ளை நால்வரையும் தந்தின்று
கனிவுநிறை முகத்தினளாய், காலங்கள் கடந்ததனால்
நனிசிறந்த வாழ்வினிலே முத்துவிழாக் காண்கின்றாய்

காண்பவர்கள் களிகூர காணாதார் கேட்டுவக்க
மாண்புடனே இவ்வுலகில் மாதொருபா கன்அருளால்
ஆண்டுபல மேன்மேலும் ஆனந்தமாய் வாழ்கவென
வேண்டுகிறோம் மாஜனவின் மாணவர்நாம் இந்நாளில்

இளங்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Mrs. Kohila Mahendran*

Writer, Dramatist
Deputy Director of Education, Valikamam Zone
Maruthanamadam, Chunnakam
17. 03. 2000

## வாழ்த்துரை

அன்பு நிறைந்த ஆசானாகவும் பேராற்றல் மிகுந்த அதிபராகவும் விளங்கிய அமரர் ஐயரத்தினம் அவர்கள் காலத்தில் மகாஜனாவிலே படிக்கக் கிடைத்த நாங்கள் எல்லோரும் பேறுபெற்றவர்கள் என்பதில் ஐயம் கிடையாது.

கல்வித் தொண்டும் தமக்குத் தொழில் என்று வாழ்ந்து காட்டிய அந்த ஐயரத்தின ஆளுமையின் பின்னே ஓர் அம்மா இருந்தார்.

"அம்பனைக்கு முன்னால் அடிக்கும் வயற்காற்றில்
கொம்புலுப்பிப் பூக்களினைக் கொட்டும் குடைவாகை"

அதிபர் அவர்களால் ஈட்டப்பட்ட வெற்றிகளுக்கு மலர் தூவியபோதெல்லாம் மிக அமைதியாகப் புன்முறுவல் பூத்தபடி ஓர் அன்னை அமர்ந்திருப்பார்.

மகாஜனா எங்களிடம் நல்லதோர் ஆளுமையைத் தந்தமைக்கு மறைமுகக் காரணியாகத் துலங்கிய திருமதி இராணிரத்தினம் அம்மா அவர்களின் எண்பதாவது பிறந்த தினம் இங்கிலாந்திலே சிறப்பாகக் கொண்டாடப்படும்போது இவ் வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் பேரானந்தம் அடைகின்றேன்.

கோகிலா மகேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெ. து. ஜயரத்தினம்
# ஒரு நண்பன்,
# ஒரு கல்வியாளன் மீதான நினைவஞ்சலி

*ஏ. எஸ் கனகரத்தினம்*

(1987 அக்டோபர் 25ஆம் திகதி நடைபெற்ற மகாஜன பழைய மாணவர் சங்கப் பிரித்தானியக் கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டத்துக்கு எழுதிய உரை. அன்று உடல்நிலை காரணமாக திரு கனகரத்தினம் அவர்கள் வராதவிடத்து திரு சி.ஜே.ரி தாமோதரம் அவர்கள் இந்த உரையை வாசித்தார். அந்த ஆங்கில உரையின் தமிழாக்கம் இது. மொழிபெயர்ப்பு: மு நித்தியானந்தன்)

தனது உன்னதப்பெரும் இலட்சியக் கனவுக்கான ஒரு மனிதனின் பூரண அர்ப்பணிப்பின் கதைதான் ஜயரத்தினத்தின் வாழ்க்கைச் சரிதையாகும். தனது சமூகத்தின் கல்வி மற்றும் கலாசார அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யத்தக்க ஒரு புனர்ஜன்மம் போலவே நவீன புதிய மகாஜனனை உருவாக்குவதே அவரது இலட்சியக் கனவாக இருந்தது. அதனை அவர் புனிதமான பணியாகவே கருதினார். தனது இலட்சியப் பள்ளியை நிர்மாணிப்பதில் அவர் தனது தனிப்பட்ட நலன்கள் அனைத்தையும் விருப்புடனேயே தியாகஞ் செய்தார். துளியும் சுயநலம் சாராத் தியாகத்தின் பொறி. தனக்காக வன்றிப் பொது நலனுக்காக ஒருவனைப் பணியாற்றத் தூண்டும் சிந்தனையின் மின்வெட்டு. எங்கோ தனது கிராமத்தின் ஒரு மூலையிலுள்ள ஆரம்பப் பாடசாலையை விட்டுவிட்டு ஜயரத்தினம் சொந்த வாழ்க்கையை அபிவிருத்தி செய்வதில் தனது முழுக் கவனத்தையும் செலுத்திச் செயற்பட்டிருப் பாரேயானால் அவர் பெரும் சம்பத்துக்களைக் குவித்து விட்டிருக்கக்கூடும். ஆனால் இதனால் நமது சமூகத்துக்குப் பெரிய பலன் எதுவும் கிடைத்திருக்கமாட்டாது. இங்குதான் நன்கு மதித்த ஒரு வர்த்தக முயற்சியாளனுக்கும் சமூகத்தொண்டனுக்குமான எல்லைக்கோடு தெளிவாகிறது. ஒரு வர்த்தக முயற்சியாளனின் பார்வை தனக்கு இலாபம் நல்காத எந்தப் பணியிலும் விழுவதில்லை. இலாபம் குவிக்கும் பேராசையை விட அதில் வேறு ஒன்றுமே இல்லை. கலாசாரம் என்றோ, கல்வி முன்னேற்றம் என்றோ அயராது பணி புரியும் ஒருவரும் புதிய உலகங்களை வென்றெடுக்கும் ஒரு தேடலிலேயே இறங்குகிறார். செல்வமோ அல்லது தன்னைச் செல்வந்தனாக்கும் அம்சமோ இவர்களின் வேலைத்திட்டத்தில் இடம் பிடிப்பதில்லை. ஜயரத்தினம் தனது மக்களின் வாழ்க்கையைப் புதிதாய் வார்ப்பதிலும் தனது தேசத்தின் ஆன்மாவைச் செழுமைப்படுத்துவதிலுமே தீவிரங் காட்டினார். அதிபர் ஜயரத்தினம் தனது பிற்சந்ததியினருக்கு விட்டுச் சென்றிருக்கும் சமூகச் சித்திரம் இதுதான். தனது வாழ்வின் ஆரம்ப தசையிலிருந்தே அவர் தனது இலட்சியக் கனவில் திளைத்திருந்தார். தனது குடும்பப் பாடசாலையை முதலாந்தரக் கல்லூரியாக - தனது கிராமத்துப் பிள்ளைகளுக்கு பல்கலைக் கழகப் புகுமுகக் கல்வியை ஊட்டத்தக்க ஒரு கல்லூரியாக மாற்றும் இலட்சியக் கனவே அது. அந்த இலட்சியத்தில் அவர் எவ்வளவு தூரம் வெற்றியடைந்தார் என்ற கதைதான் மகாஜனக் கல்லூரியின் சரித்திரமாகும். கல்விப் பணியின் மீதான ஜயரத்தினத்தின் நாட்டம் அவரது பரம்பரை வழிவந்தது. தனது தந்தையாரான டெய்லர் துரையப்பா பிள்ளையின் இலட்சியக் கனவையே இவரும் வரித்திருந்தார். தனது காலத்தில் பாவலராக துரையப்பாபிள்ளை மிகப் பிரபலம் பெற்றிருந்தாலும் இங்கிலிஷ் பாடசாலை ஒன்றின் தாபகராகவே இவர் நன்கு அறியப்பட்டிருந்தார். சாதாரண மக்களின் ஆங்கிலப் பள்ளி என்ற அர்த்தத்தில் அவர் தனது பாடசாலைக்கு **மகாஜனன்** என்று மிகப் பொருத்தமாகவே பெயரிட்டிருந்தார். இப்படித்தான் 1910இல் மகாஜனக் கல்லூரி தோற்றங் கண்டது. கிராம மக்கள் அதன் நிறுவனர் வைத்த பெயராலே அப்பள்ளியை அழைத்துவந்த போதிலும் "டெய்லர்" பள்ளி என்றும் அப் பள்ளியைத் தொடர்ந்தும் அழைத்து வந்தனர். இப் பள்ளிக்கு சூட்டப்பட்ட நாமத்தால் அது அங்கீகாரம் பெற்று அழைக்கப்பட சிறிதுகாலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்தது. இப் பள்ளியின் தாபகரின் புதல்வர் அதற்கு நிலையான ஒரு கல்லூரியின் அந்தஸ்தை தேடிக் கொடுத்தபின்னரே மகாஜனக் கல்லூரியின் பெயர் நிலைபெறலாயிற்று.

1945இல் மகாஜனக் கல்லூரியின் நிர்வாகத்தை ஜயரத்தினம் கையேற்கும்போது அது மூன்றாந்தரக் கல்லூரியாகவே இருந்தது. அப்போது அங்கு ஜே எஸ் ஸி வரையுமே போதிக்கப்பட்டு வந்தது. மிகப்பெரும் இடர்களுக்கு மத்தியிலே இப்பாடசாலை இயங்கிவந்தது, பாடசாலையில் வழங்கப்பட்ட சம்பளம் குறைவாக இருந்ததால் சிறந்த ஆசிரியர்கள் இந்தப் பள்ளியை நோக்கி அவ்வளவாக ஈர்க்கப்படவில்லை. திறமை மிகுந்த, வசதி படைத்த மாணவர்கள் உயர்தரப் பாடசாலைகளை நோக்கிச் சென்றுவிட, மகாஜனக் கல்லூரி இரண்டாந்தர மாணவர்களுக்கு மட்டுமே சேவையாற்றுவதாக அமைந்தது. இத்தகைய இடர்ப்பாடான நிலையிலிருந்து பள்ளியை மீட்டெடுத்துவிடவேண்டும் என்று கல்லூரியின் புதிய அதிபர் தீர்க்கமான சங்கற்பம் செய்திருந்தார்.

1945ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இலவச கல்விச் சட்டம் இலங்கையின் சட்டவாக்க வரலாற்றில் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தியதொன்றாகும். இக் கல்வி மசோதாவை சபையில் முன்மொழிந்தபோது அமைச்சர் பெருமிதமாகக் குறிப்பிட்டதுபோல் இந்நாட்டின் ஒவ்வொரு பிள்ளைக்கும் பாலர் பாடசாலையிலிருந்து பல்கலைக் கழகம் வரை இலவசமாகக் கல்வி பெறும் உரிமையை இச்சட்டம் வலியுறுத்தியது. இதன் அடிப்படையில் அரசாங்கம் ஆசிரியர்களுக்கான முழுச் சம்பளச் செலவினத்தையும் வழங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. சுதந்திரமாகவும் திறமாகவம் பள்ளியை அபிவிருத்தி செய்வதில் தனிப்பெருந் தடையாக இருந்த நிதிப்பிரசினை இதனால் தீர்ந்துபோய்விட்டது. ஆங்கிலக் கல்விக்கான போட்டா போட்டியில் சற்றே காலந் தாழ்த்திய நிலையில் கிராமப் பாடசாலைகளும் இறங்கின. சலுகைகள் அற்ற நிலையில் இயங்கிய இப் பாடசாலைகள் விரிவு பெறவும் வளர்ச்சி காணவும் இப்போது வாய்ப்புக்கள் கிடைத்திருந்தன.

இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மகாஜனவை ஒரு கல்லூரியாக உயர்த்தும் தனது கனவை நனவாக்கிட அதிபர் ஜயரத்தினம் பின்நிற்கவில்லை. புதிய கல்விச்சட்டம் அமுலாகியதும் புதிய அநுமதி கோரி சகல ஆங்கிலப் பாடசாலைகளை நோக்கியும் விண்ணப்பங்கள் குவிந்தன. அதிகரிக்கும் மாணவர் தொகைக்கேற்ப ஆசிரியர்களும் அதிகரிக் கலாயினர். பாரிய நம்பிக்கைகளும் விஸ்தரிப்பும் நிறைந்த காலப்பகுதியாக அது திகழ்ந்தது. ஜயரத்தினமும் அவரது அணியினரும் பெரும் அர்ப்பணிப்புடனும் பொதுநல உணர்வுடனும் இப்பணியில் ஈடுபட்டிருந்தனர். தாங்கள் அதுகாலவரை நினைத்தும் பார்த்திராத அளவுக்கு மிக விரிந்த அளவில் கல்வி வழங்குவதற்கான கட்டுமான அமைப்பினை மகாஜனக் கல்லூரி வழங்கவேண்டியிருந்தது. புதிய கட்டட அபிவிருத்திக்கான திட்டம் உருவாகியது. மந்திர ஜாலம் போலவே வகுப்பறைகளும் விஞ்ஞான ஆய்வுகூடங்களும் தலைதூக்கின. நூலகம் விஸ்தரிக்கப்பட்டது. பள்ளிக்கு அருகிலுள்ள காணிச் சொந்தக்காரர்கள் பாடசாலையின் விளையாட்டு மைதானத்திற்காக தமது காணிகளை இனாமாக வழங்கவோ அல்லது விற்கவோ இசைந்தனர். தகுதியும் ஆற்றலும் படைத்த ஆசிரியர்கள் வந்து சேர்ந்தனர். பெற்றோரும் நண்பர்களும் மிகுந்த உற்சாகத்தோடு ஒத்துழைத்தனர். இரண்டு ஆண்டுகளிலேயே அதாவது 1949இல் இப் பாடசாலை முதலாந்தரப் பாடசாலையாக உயர்த்தப்பட்டது. அவர்களின் பெருங்கனவு நனவாகியது. நாலே ஆண்டுகளில் பாடசாலை அதிபரின் அதியுன்னத தலைமைத் துவத்திற்கு சாட்சியம் போன்று மகாஜனக் கல்லூரி முதலாந் தரத்தை எட்டிப் பிடித்திருந்தது. தொலைவில் இருந்த நகர்ப் பாடசாலைகளை நோக்கி பஸ்ஸிலும் புகையிரதத்திலும் நாள் தோறும் பயணம் சென்றுவந்த தெல்லிப்பழை மாணாக்கர்கள் இப்போது தங்கள் கிராமத்திலேயே பயிலலானார்கள். மாணவர்களுக்கும் பெற்றோ ருக்கும் இது ஒரு வரப்பிரசாதமாகவே அமைந்தது.

அந்தக் காலங்களில் பாடசாலைகள் தமக்கு நிதி சேகரிப்பதானால் கார்னிவேல் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வது பொதுவான நடைமுறையாக இருந்தது. சில கார்னிவேல் நிகழ்ச்சிகள் ஒரு மாதத்துக்கு மேலும் தொடர்ந்தன. வளர்நிலையில் இருந்த மகாஜனக் கல்லூரி மேலும் தீவிர வளர்ச்சி காணும் தணியாத தாகத்தில் இருந்தது. தாங்களும் ஒரு கார்னிவேல் நிகழ்ச்சியை நடத்த மகாஜனக் கல்லூரி தீர்மானித்தது. நாள்தோறும் பெருந்தொகையான மக்களை ஈர்க்கக்கூடிய வசதியான இடத்தில் தெல்லிப்பழை அமைந்திருக்கவில்லை. ஆகவே மகாஜனவின் கார்னிவேல் நிகழ்ச்சி யாழ்ப்பாண மாநகர சபை மைதானத்திலே நடைபெற ஏற்பாடாயிற்று. இந்தக் கார்னிவேல் நிகழ்ச்சியின்போது அவர்களின் உன்னத அமைப்பு, ஒழுங்குகள் ஆகிவற்றிற்காக நான் ஜயரத்தினம் அவர்களைப் பாராட்டியபோது அவர் தனது வழமையான புன்னகையோடு "இல்லை, கனகரத்தினம். நாங்கள் பெரும் எதிர்பார்ப்புக்களோடு இருக்கிறோம். நாங்கள் எவ்வளவோ காசை வீசியிருக்கிறோம். எங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிற் காசு வரவில்லை என்றால் எங்கள் கதி அவ்வளவுதான்" என்று என்னிடம் தெரிவித்தார்.

உண்மையாகவே இந்த நிகழ்ச்சியை ஆரம்பிப்பதற்கான நிதியைப் பெறுவதற்கு அவரும் அவரது சகாக்களும் தங்களின் முழு நாணயத்தையுமே அடகு வைத்துத்தான் காசு சேர்த்திருந்தனர் என்றுதான் சொல்லவேண்டும். தங்கள் இலட்சியக் கனவை வென்றெடுப்பதற்கு அவர்கள் கூட்டாக மேற்கொண்டிருந்த சவால் இது. அவர்கள் ஆரம்பத்திற் கொண்டிருந்த அச்சங்களையும் மீறி மகாஜனக் கார்னிவேல் மிகப் பெரிய வசூலைத் தேடிக்கொடுத்திருந்தது.

வடமகாண அசிரியர்கள் சங்கத்தின் நிர்வாகக் குழுவில் ஜயரத்தினம் அவர்களுடன் நானும் பணியாற்றியிருக்கிறேன். அவரை ஒருவிதத்தில் மிதவாதி என்றே சொல்லலாம். எந்தத் தீவிரவாதத்துக்குள்ளும் அவர் தன்னை நுழைத்துக்கொண்டதில்லை. கலந்துரையாடல்களின்போது அவர் நிதானம் இழந்துபோய்ப் பேசியதை நான் ஒருபோதுமே பார்த்ததில்லை. அவரால் ஒரு நாளுமே சகித்துக்கொள்ள முடியாத நபராக இருந்தாலும் கூட அவருடன் பேச நேர்ந்தால் அவரது வார்த்தைகளில் எப்போதும் நிதானத்தைத் தவற விடமாட்டார். பாடசாலைகளை அரசாங்கம் கையேற்க இருப்பது குறித்து ஒரு நாள் அவருடன் பேசநேர்ந்தது. அரசாங்கத்தின் இந்தக் கொள்கையை பழம்பெரும் பாடசாலைகளின் நிர்வாகிகள் அப்போது தீவிரமாக எதிர்த்துக்கொண்டிருந்தனர். தனது துணையாளர்கள்கூட அரசாங்கத்தின் இத் திட்டத்தால் மிகவும் குழம்பிப்போய் இருப்பதாக அவர் என்னிடம் தெரிவித்தார். அந்தப் பாடசாலை தங்களின் சொந்தக்குழந்தை போன்றது என்றும், இவ்வளவு காலமும் அதனைத் தங்களின் உழைப்பாலும் வியர்வையாலும் கட்டி எழுப்பியிருப்பதாகவும் அவர்கள் உணர்ந்தனர். அந்தப் பாடசாலை என்றென்றும் அவர்களுடைய சொந்தப் பள்ளியாகவே இருக்குமென்றும் தெல்லிப்பழையில் இருக்கும் அந்தப் பள்ளியை அரசாங்கம் ஒருபோதுமே எங்கும் கொண்டு சென்றுவிட முடியாது என்றும் அரசாங்கம் கல்லூரி நிர்வாகத்தைப் பொறுப்பேற்ற பின்புங்கூட மகாஜனக் கல்லூரி எனறென்றும் அங்கு நிலைத்து அந்த மக்களுக்குச் சேவையாற்றும் என்று தான் அவர்களுக்குப் பதில் கூறியதாக அவர் என்னிடம் சொன்னார். அது அவருடைய சட்ட பூர்வமான சொத்தாக இல்லாவிட்டாலும் அந்தப் பாடசாலையின் பூரண கட்டுப்பாட்டையும் தன்வசம் கொண்டிருந்த ஒருவரிடமிருந்து இத்தகைய அபிப்பிராயத்தினை நான் எதிர்பார்த்திருக்கவில்லை. அநேகமாக அந்தக் காலத்திலிருந்த சகல பாடசாலை முகாமையாளர்களும் அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்பதை எதிர்த்தே நின்றனர். அவர்கள் அனைவரும் பொதுநல நோக்கிலேயே இதனை எதிர்த்தார்கள் என்று கூறுவதற்கில்லை. ஆனால் இங்கோ அந்தப் பாடசாலையைக் கட்டி எழுப்பிய சிற்பியாகவே திகழ்ந்த ஒரு முகாமையாளர் அரசாங்கத்துடன் சேர்ந்து செயற்பட முன்வருகிறார்.

தன்னை உருவாக்கிய ஒருவரின் அழியாத மகத்தான ஞாபகார்த்தமாக மகாஜனக் கல்லூரி இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது. தமது மண்ணின் மக்களுக்காக இந்தக் கல்வி மாளிகையைக் கட்டி எழுப்ப உன்னத அர்ப்பணிப்போடும் பொதுநல உணர்வோடும் அயராது பாடுபட்ட ஜயரத்தினத்தினதும் அவரோடு விசுவாசமாக உழைத்த ஆசிரியர்குழுவினரதும் சரித்திரம் என்றென்றும் நினைவுகூர்ந்து கௌரவிக்கப்படும்.

My association with Mr. T. T. Jayaratnam extends over a period of nearly twenty years. I have worked with him as an assistant teacher for thirteen years and as Deputy Principal for the last seven Years. The rapid growth of Mahajana during this period is phenomenal. The period from 1952-1962 may be termed the Golden Age of Mahajana ........

***M. Mahadevan***

**'Mahanan, Jayaratnam Valedictory Number. Vol.39'**

**December 1970**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நின்சேவை பள்ளி நிதம்வாழ்த்தும்


ப. வை. ஜெயபாலன்


பல்லா யிரம்பேரை உயர்த்திவிட்ட பள்ளி
        பலவாறு குடும்ப உணர்(வு) ஒளிர்ந்த வான்வெள்ளி
எல்லோரும் உறவுநட்பு அயலென்ற பேரில்
        இணைந்திருந்து பயின்ற பள்ளி தெல்லிப்பளை ஊரில்
வல்லாளன் ஜயரத்ன மகிபன்திறன் தலைமை
        வாய்த்ததனால் புகழ்பூத்த மாஜனாவின் நிலைமை
நல்துணையாள் ராணியம்மை உற்றதுணை தானே
        நாளெல்லாம் பள்ளிக்கவர் உழைக்கவைத்த தாமே

மாமனவர் கொள்கைவழி பள்ளியினை ஆக்க
        மணாளனதன் உயர்வுழைப்பில் வாழ்நாளைப் போக்க
கோமகனார் பேர்புகழே ஊர்உலகம் மெச்சும்
        குடும்பம்பல தேவைகளாற் தடுமாறி நிற்கும்
ஆயினும்என் மனைத்தக்க மாண்புடையாள் ராணி
        அயராது தனித்துழைத்தார் குடும்பத்தைப் பேணி
கோயில்நட ராசர்பின்னால் இருவரையும் நாங்கள்
        கொலுவிருத்திக் கும்பிட்டும் கடன்தீரா போங்கள்

அம்மாநீர் தாயேதான் மாணாக்கர்க் கெல்லாம்
        அதிகநலன் நீள்ஆயுள் அமையும்உமக் கெல்லாம்
எம்முடன்நீர் லண்டன்கிளை விழாக்களிலே வந்து
        இணைகின்றீர் ஊக்குவித்து ஆசிகளைத் தந்து
நிம்மதியும் பெருவாழ்வும் நிதம்பெறுக கொண்டு
        நிகழவுள்ள நூற்றாண்டு வைபவத்தைக் கண்டு
தன்மக்கள் மீள்அமைதி ஊர்சுற்றம் என்று
        தான்நிமிரும் விரைவிற்பள்ளி தன்நிலத்தில் நின்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





புதல்வன் ஜெயகுமாரன் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை இராணிரத்தினம் இன்னும் வாழவேண்டும்

பொ.கனகசபாபதி

"தந்தை தொடக்கித் தருமோர் சிறுபள்ளி
இந்த விதமாய் எழும்பி இருக்கிறதே!"

1957ஆம் ஆண்டிலே மகாஜன சிற்பி தெ.து.ஜயரத்தினம் அவர்களின் 25 ஆண்டு கால சேவையைப் பழைய மாணவர்கள் பாராட்டி விழா எடுத்தபோது மகாஜனவின் புகழ்மிக்க பழைய மாணவர் "மஹாகவி" எழுதிய கவிதை மாலையில் உள்ள இரு வரிகளே இவை.

1910ஆம் ஆண்டில் அமரர் துரையப்பாபிள்ளையால் ஆரம்பிக்கப்பட்ட சிறு பள்ளி, 1957இல் மஹாகவி அவர்கள் ஆஹா, இந்த விதமாய் எழும்பி இருக்கிறதே என வியந்து கூறும் அளவினுக்கு வளர்ந்தது என்றால், அங்கே அதிபர் ஜயரத்தினம் அவர்களின் அயராத உழைப்பு, ஆசிரியர்களின் தளராத ஒத்துழைப்பு, பெற்றோர் - பழைய மாணவர்களின் குறைவிலாத பங்களிப்பு என்பனவோடு நிறுத்திக்கொள்ள முடியாது. அதிபரவர்களின் நன்முயற்சிக்குத் தோன்றாத் துணையாக நின்ற திருமதி இராணிரத்தினம் அவர்களின் நிறைவான அர்ப்பணிப்பு சொல்லுந்தரமன்று.

"Every successful man has a woman behind him" என ஆங்கிலத்தில் கூறுவர். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னும் ஒரு பெண் இருப்பாள் என்ற இதே கருத்தைப் பாரதியார் அழகுறக் கூறியுள்ளார்.

"காத லொருவனைக் கைப்பிடித்தே அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து"
என்கிறார்.

அமரர் ஜயரத்தினம், மங்காப் புகழுடன், இன்றும் அதிபர் என்பவரின் புருஷ லக்ஷணத்துக்கு உதாரணமாகக் கூறப்படுமளவிற்கு தகை சான்றவராக உள்ளார் என்றால் அவர் காரியம் யாவிலும் கைகொடுத்த அம்மையார் இராணிரத்தினமே அப் பெருமை யாவற்றுக்கும் மூலகர்த்தா என்பது மிகையான கூற்றாகாது.

*தோற்றத்தில் எளிமை என்றால் அப்படியோர் எளிமை*
*பேச்சிலே மென்மையென்றால் அப்படியோர் மென்மை*
*குணத்திலே பொறுமை என்றால் அப்படியோர் பொறுமை*

அன்னை இராணிரத்தினம் தகைமைகொள் பெண்ணிற்பெருந்தக்கவர் இன்னொருவரைப் பார்த்தல் அரிது.

குடரும் கொழுவும் குருதியும் என்பும்
தொடரும் நரம்பொடு தோலும் - இடையிடையே
வைத்த தடியும் வழும்புமாம் மற்றிவற்றுள்
எத்திறத்தாள் ஈர்ங்கோதை யாள்
............. என்கிறது நாலடியார்.

"பெண்மை" என்பது வெறும் உடலிலே இல்லை. அது உளப்பாங்கிலேதான் உள்ளது என்பதே இதன் பொருள். அன்னை இராணிரத்தினம் பெண்மையின் முழு உருவம் என்பதை அவரோடு பழகிய எவரும் உணர்ந்திருப்பர் என்பதில் சற்றேனும் ஐயம் இல்லை.

எனக்கு அன்னையார் அவர்கள் அறிமுகமானது 1957ஆம் ஆண்டிலே. நான் மகாஜனக் கல்லூரி விலங்கியல் ஆசிரியராகப் பதவி ஏற்றபோது பவானியும் பின்னர் ஜெயகுமாரும் எனது மாணவர்கள். நான் சிறந்த ஆசிரியனாக இருந்தேனோ, எனக்குத் தெரியாது. ஆனால் பெரும்பாலான மாணவர்களின் உள்ளத்திலே இடம் பிடித்திருந்தேன் என்பது தெரியும். அந்த அளவிலே பவானி மூலமாகவும் ஜெயகுமார் மூலமாகவும் இராணி அம்மா உள்ளத்திலும் எனக்கோர் இடம் ஒதுக்கப்பட்டது. அவர் "தம்பி" என அன்பொழுக அழைக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது நான் செய்த தவப்பயன். என்னைப்போன்றே அவர்களுக்கும் பூக்கன்றுகள் வளர்ப்பதிலும் கோழி வளர்ப்பதிலும் நிறையவே ஆசை. Thumburgea, Ixora போன்றவற்றை நான் கொடுத்து உதவ Allamanda, Petria போன்றவற்றை அவர்கள் தந்து பண்டமாற்றுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தது இத்தனை வருடங்களுக்குப் பிறகு இப்பொழுதும் பசுமையாய்க் கண்முன்னே காட்சி தருகிறது.

பாடசாலைக் கல்வி முடிவுற்ற பின்னும் ஜெயகுமாரும் அவரது நண்பர்கள் சிலரும் அடிக்கடி என் வீடு வருவார்கள். ஜெயகுமார் காதல் வயப்பட்டது தாய் தந்தையருக்குத் தெரியவந்து பெற்றோரின் எதிர்ப்பு எதுவுமில்லாமல் திருமணம் நடந்தேறியது. ஆனால் அம்மையார் என் வீட்டுக்கு ஒருமுறை வந்தபொழுது கூறியதை இப்போது நினைவு கூர்ந்தாலும் அவரது குழந்தைத்தனமான வெள்ளை உள்ளம் தெள்ளெனத் தெரியும். “எனக்குத் தெரியுமா? அவன் உங்களுடைய வீட்டுக்குப் போறன் என்று சொல்விட்டுத்தான் வெளியே போவான். அவன் உங்களுடைய வீட்டுக்கு வராமல் எங்கே போனான் என்று இப்போ அல்லவா தெரிகிறது” என்றார்கள். அவரது உள்ளம் கள்ளமில்லாத வெள்ளை உள்ளம். எவரையும் சந்தேகக் கண்ணுடன் பாராத நல்ல உள்ளம்.

நான் மகாஜனா அதிபராகப் பதவியேற்ற 1976ஆம் ஆண்டு தீபாவளிப் பண்டிகை. நான் பாடசாலை ஆலயத்துக்கு வந்தேன். அதிபரும் வந்திருந்தார். அம்மையார் அப்பொழுது திருகோணமலையில் டாக்டர் மகேஸ்வரன் - வாணி தம்பதியினருடன் தங்கியுள்ளார். ஆலயத்திலே பூசை முடிவுற்றதும் அதிபருக்கு ஐயரத்தினம் மண்டபத்திற்குரிய ஆக்கவேலைகள் பற்றி விளக்கிவிட்டு அந்த வார இறுதியில் யாழ். விளையாட்டுச் சங்கத்தாரால் நடத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டியில் எமது பாடசாலைக்கும் யாழ் இந்துவுக்கும் இடையே நடைபெறவுள்ள போட்டிக்கு வருமாறு அழைக்கிறேன். எனக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லை, உடல் நலமாயிருந்தால் வருகிறேன் என்றுவிட்டு வீடு செல்கிறார். மறுநாள் மாலை தெல்லிப்பழைச் சந்தியிற் காண்கிறேன். வாழைப்பழத்துடன் வருகிறார். “பவானி ஸ்கந்தஷஷ்டி விரதம். பழம் வாங்கிச்செல்கிறேன்” என்கிறார். அதற்கு அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ் இந்துவிற்கும் உரும்பிராய் இந்துவிற்கும் உதைபந்தாட்டப்போட்டி. அவர்கள் தரம் அறிவதற்காக நான் சென்று பார்த்துவிட்டு வீடு திரும்புகிறேன். மல்லாகத்தில் என்னை மறித்து அதிபர் அமரராகிவிட்டார் எனச் சொல்லுகிறார்கள். நான் உடன் சென்று பவானியுடனும் ஜெயகுமாருடனும் பேசுகிறேன். அம்மாவுக்கு இதை எப்படி அறிவிப்பது? அவர் இதை எப்படி ஏற்கப்போகிறார்? என்பதே எல்லோருடைய அங்கலாய்ப்பு. அதிபர் இல்லாத அம்மாவின் வாழ்க்கையை எவராலுமே கற்பனை பண்ண முடியவில்லை. அம்மா இதைத் தாங்கமாட்டார் என்பதே எல்லாருடைய கவலையும். ஆனால் எமது பயம் எவ்வளவு ஆதாரமற்றது என்பதை நாம் மறுநாளே காணக்கூடியதாக இருந்தது. அந்த மென்மையான உள்ளம் எதையுந் தாங்கும் இதயம் என்பதை அதிபரின் இறுதி நிகழ்ச்சியின்போதும் அதன்பின்னர் நடைபெற்ற ஒவ்வொரு நிகழ்ச்சியின்போதும் நான் கண்டுள்ளேன்; வியந்துள்ளேன்.

எனக்கு அரசியற் செல்வாக்கால் இடமாற்றம் ஏற்பட்டபொழுது, அதிபர் உயிருடன் இருந்திருந்தால் என்ன செய்திருப்பாரோ அதனையே அம்மையாரும் செய்தார். கனகசபாபதி என்ற ஒரு தனிமனிதனின் நலத்தைவிடப் பாடசாலையின் நலன் பெரிது எனக் கருதியே இடமாற்றத்தை எதிர்த்தார். பாடசாலை மீண்டும் மேன்மை நிலைக்கு வருவதைக் கண்டு களித்தவருக்கு, இடமாற்றம் பெரும் கவலை தந்ததை அவர் வெளிப்படையாகவே கூறத் தயங்கியதில்லை. இடமாற்றம் இரத்தானதை அவர்களிடம் மாணவர்கள் போய்ச் சொல்லியபோது, தனது மகிழ்ச்சியைக் கூறியதுடன் நில்லாமல், இனிப்போய்க் கவனமாகப் படியுங்கள் என்று அறிவுரை கூறியது அவரது மனத் தூய்மையின் பிரதிபலிப்பு.

அதிபர் மறைந்து ஏறக்குறைய 23 வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் நம்மிற் பலர் அவரின் பிரதியாகவே அன்னை இராணிரத்தினத்தைக் கண்டோம். வள்ளுவன் சொல்கிறான், நல்ல மனைவி கிடைத்தால் இவ்வுலகமே சொர்க்கம் என்று.

பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்<br>
புத்தேளிர் வாழும் உலகு -குறள் 58

இல்லவள் மாண்பானால் உள்ளதென் மனைவியைப் பெற்ற அதிபர் இங்கு அருமையான சொர்க்கம் ஒன்றிருக்க அவசர அவசரமாய் ஏன் அங்கு சென்றார் என்பது என்னால் விடைகாணமுடியாத வினா.

அன்னை அவர்கள் நல்ல தாயாக, பிள்ளைகளுக்கு மாத்திரமல்ல, மகாஜன மைந்தர்களுக்கும் பெறற்கரிய பெருந்தாயாக வாழ்ந்து வருகிறார்கள். அவர் இன்னும் பல்லாண்டு வாழவேண்டும் என வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றுபோல் என்றும் இயல்க!

அ. சேபசன்

யாழ்ப்பாணத்தின் கல்வி வரலாற்றில் இரண்டு பாடசாலைகள் - தேவரையாளி இந்துக் கல்லூரி, மகாஜனக் கல்லூரி - விதிவிலக்கானவை. முன்னது சிறுபான்மைத் தமிழர்களுக்காக சிறுபான்மைத் தமிழ்க் கல்விமானான திரு சூரன் அவர்களாற் தொடங்கப்பட்டது. பின்னது தன் காலத்தில் மிகவும் புகழ்பெற்று விளங்கிய பாவலர் துரையப்பாபிள்ளை என்னும் கல்விமானாற் தொடங்கப்பட்டது. யாழ்ப்பாணத்தின் ஏனைய பாடசாலைகள் கிறிஸ்தவ/ சைவ நிறுவனங்களாலோ அன்றி சொத்துடைமையாளர்களாலோ ஆதரிக்கப்பெற்றவை.

தந்தையார் பாவலர் துரையப்பாபிள்ளை காலமாகி பதினாறு ஆண்டுகளின் பின்னர் பாடசாலையின் அதிபர் பொறுப்பை திரு ஜயரத்தினம் ஏற்கும்போது இருநூறுக்கு உட்பட்ட மாணவர்கள் கல்விகற்கும் மிகச் சிறிய பாடசாலையாகவே மகாஜனா இருந்தது. இருபத்தைந்து ஆண்டுகால அதிபர் சேவையின் பின்னர் அவர் ஓய்வு பெற்றபோது இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்கும் இலங்கையின் அதியுயர் (Super grade) கல்வி நிறுவனமாக அது மாறியிருந்தது. இப்பெரும் கல்லூரியில் எட்டு வகுப்பறைகள் மட்டுமே அரசாங்க உதவியுடன் கட்டப்பட்டவை. ஏனையவை அனைத்தும் பொதுமக்களிடம் சேகரித்த நிதியினூடு எழுந்தவை என்பது திரு ஜயரத்தினம் அவர்களது ஆளுமைக்குச் சான்று.


(இவ் வெற்றியின் கதையை இத் தொகுப்பிலுள்ள ஏனைய கட்டுரைகளிற் காணலாம். எனினும் இதனை நோக்கிய அவரது தேர்வுகள் - உனை நீ அறி என்ற கல்லூரியின் நோக்கு, கொடியின் நிறமாக மண்ணிறமும் வெள்ளையும், இந்திய தேசிய கீதத்தின் மெட்டில் எழுதப்பெற்ற கல்லூரிக் கீதம், மிகவும் கவித்துவமான கொடி வணக்கப் பாடல் என்பவையும் மத்தியில் மைதானமும் சூழவும் வயற்காற்றுப் புகுந்துவரும் வகுப்பறைகளும் கொண்ட ரம்மியமான அமைப்பும் அவரது கவித்துவ மன உணர்வை நினைவுறுத்துபவை. இதனாலோ என்னவோ மிகப் பெருந்தொகையான எழுத்தாளர்கள் மகாஜனக் கல்லூரியில் உருவானார்கள்.)

பணப்பயிரைப் பிரதானமான பொருளாதார முயற்சியாகக் கொண்டிருந்த விவசாயப் பிரதேசமாகவே கல்லூரியைச் சூழவிருந்த கிராமங்கள் இருந்தன. கல்லூரியினால் அறவிடப்பட்ட மிகவும் சொற்பமான வசதிக் கட்டணத்தைக்கூட செலுத்த முடியாத நிலையிலேயே பெருமளவு மக்கள் வாழ்ந்தனர். வசதிக் கட்டணம் செலுத்தவேண்டிய காலத்தில் பெற்றோர்கள் அதிகாலையிலேயே அதிபர் வீட்டுக்குச் சென்று காவல் நிற்பார்கள் எனவும், அரசாங்கம் கல்லூரியைப் பொறுப்பேற்பதற்கு முன்னர் அனைத்து ஆசிரியர்களுக்கும் ஒரே மாதத்தில் சம்பளத்தை வழங்க முடிவதில்லை எனவும் அதிபர்கூட தனது சம்பளத்தை இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒருமுறையே பெறமுடிந்ததெனவும் அதிபரின் மகன் திரு ஜெயகுமாரன் நினைவு கூர்ந்தார். தெல்லிப்பழைக் கடைகளில் கணக்கு வைத்துப் பொருள்களை வாங்கியதாலேதான் தங்களது வீடு இயங்கியது என்றும் சொன்னார்.

ஒவ்வொரு மனிதனுக்கும் கனவுகள் உண்டு. கனவை நனவாக்கும் முயற்சியிலேயே ஒவ்வொருவரும் முயல்கிறார்கள். கனவின் சமூகத் தன்மையையும் அதில் எவ்வளவு தூரம் வெற்றி பெறுகிறார்கள் என்பதையும் பொறுத்தே சமூகத்தில் அவர்களின் இடம் தீர்மானிக்கப்படுகிறது. அதிபர் ஜயரத்தினம் கண்டது பெரும் கனவு. தனது கிராமத்தின் குழந்தைகள் யாவருக்கும் கல்வியை வழங்கவும் அதன்மூலம் அவர்கள் வாழ்வின் உன்னதங்களை எய்தவும் வாய்ப்பளிக்கும் கனவு. மகாஜன என்ற தனது மாபெருங் கனவை அவர் கட்டி எழுப்பியபோது தனிப்பட்ட வாழ்வில் அவர் இழந்தது அநேகம். திருமதி இராணிரத்தினம் ஜயரத்தினம் அவர்களின் பரிபூரண ஒத்துழைப்பின்றி தனது இலட்சியக் கனவில் பெருவெற்றி எய்தியிருக்க முடியாது.

திருமதி இராணிரத்தினம் ஜயரத்தினம் அவர்களுக்கு எண்பது வயதாகிவிட்டது. மகாஜனக் கல்லூரிக்கு தொண்ணூறு வயது. தனது இருபத்திரண்டாவது வயதில் திரு தெ. து. ஜயரத்தினம் அவர்களைக் கரம் பிடித்த நாள் முதலாக மகாஜனக் கல்லூரியின் உயர்வை வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு வாழ்பவர். தனது கணவனின் அத்தனை முயற்சிகளிலும் உடனிருந்தவர். வாழும் காலத்தில் அவரது முயற்சிகள் கௌரவிக்கப்படுவது மகிழ்வைத் தருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதல்வன் ஜெயகாந்தன் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையும் தாயும்

கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை

ஈழத்திருநாட்டிற் பெருநிலை பெற்றோங்கும் மகாஜனக் கல்லூரியை 1910 ஆம் ஆண்டிலே மகாஜன உயர்கலைக் கழகம் என்று பெயரிட்டுத் தெல்லிப்பழை நகரிலே நிறுவியவரும் அந்நகரை அணிசெய்யும் மற்றைத் தாபனங்களாகிய தபால் நிலையம், புகைவண்டி நிலையம், கூட்டுறவுக் கழகம் ஆதியன தோன்றுவதற்கு முன்னின்றுழைத்த முதன்மைப் பிரமுகரும் மாணவர் மனத்திலே சைவத் தெளிவும் செந்தமிழ்ச் செழுமையும் ஆங்கிலத் தேர்ச்சியும் பெருக்கி வழிப்படுத்திய தலைமை ஆசிரியருமாகிய பாவலர் தெ.அ.துரையப்பா பிள்ளைக்கும் அவர் தருமபத்தினியாராகிய தையல்நாயகி அம்மையாருக்கும் தலைமகனாக, திரு ஜயரத்தினம் அவர்கள் 1913ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ஆம் நாள் அவனியிலே உதித்தார்.

தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையில் திரு ஜயரத்தினம் அவர்கள் வித்தியாரம்பம் பெற்றார். 1919ஆம் ஆண்டிலே தந்தையாரது மகாஜன உயர்கலைக் கழகத்தில் ஆங்கிலம் கற்கப் புகுந்தார். பெரும் புகழாளராகிய தந்தையார் துரையப்பா பிள்ளை 1929ஆம் ஆண்டிலே அமரரானார்.

ஜயரத்தினம் அவர்கள் யாழ். இந்துக்கல்லூரியிற் சேர்ந்து இலண்டன் மற்றிக்குலெஷன் பரீட்சையிலே தேறினார். இன்டர் ஆட்ஸ் கற்கும்பொருட்டு யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சென்றார். அவ்வேளையில் ஆசிரியராகச் சேர்வதால் நலன் கிடைக்கும் என அறிந்தமையால் 1932ஆம் ஆண்டிலே தமது கல்விப் பயிற்சியை நிறுத்திவிட்டு மகாஜன உயர்கலைக் கழகத்தில் ஓர் உதவி ஆசிரியராகப் பதவி ஏற்றார். கல்வியைத் தொடர்ந்து இன்டர் பரீட்சையிலும் சித்தியடைந்தார்.

ஜயரத்தினம் அவர்கள் ஆங்கிலப் பயிற்சித் தராதரம் பெற விழைந்து விண்ணப்பித்தார். ஜயரத்தினம் அவர்கள் அக் கலாசாலைப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். இத் தெரிவிலே சித்திபெற்றோர் நாற்பதின்மருள் திரு ஜயரத்தினம் ஒருவரே யாழ்ப்பாண மாணவராக அமைந்தார்.

இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்று, பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியே வந்து மகாஜனாவிலே தமது ஆசிரியப் பணியைத் தொடர்ந்தார். அப்பொழுது திரு கா. சின்னப்பா அவர்கள் தலைமை ஆசிரியராக இருந்தார்.

பயிற்சி பெற்று வந்தும் திரு ஜயரத்தினம் அவர்களின் கற்கும் தாகம் குறையவில்லை. கலைமாணிப் பட்டம் பெறவேண்டும் என்ற துடிப்புடன் அப்பரீட்சை குறித்துக் கற்கத் தொடங்கினார்.

இந்நாளில் இவர் தமது அன்னையாரின் பணிப்புக்கிசைந்து 1942இல் திருமணமும் புரிந்து கொண்டார். உரிமை மைத்துனியாகிய நிறைகுண மங்கை இராணிரத்தினம் இவரது வாழ்க்கைத் துணைவியானார். சில நாள்களிலே திரு ஜயரத்தினம் அவர்கள் பீ.ஏ (B.A) பரீட்சையிற் சித்தியெய்திய பேறும் பெற்றார். "இல்லதென் இல்லவள் மாண்பானால்" என்ற வள்ளுவர் வாக்கினைத் திருமதி ஜயரத்தினம் அவர்கள் மெய்ப்பித்தார் என்றே கூறும் அளவுக்கு அவரது மங்கல மனைமாட்சி சிறந்தோங்குவதாயிற்று. தம் கணவனாரின் பெரும்புகழ் மிகுதற்கு இந்த அம்மையார் பெருந்துணையாக விளங்கினார்.

1945ஆம் ஆண்டிலே தலைமையாசிரியர் திரு கா சின்னப்பா அவர்கள் அமரராயினார். திரு ஜயரத்தினம் அவர்கள் அத் தலைமைப்பீடத்தை ஏற்றுத் தம் பணியை விரிவாக்கத் தொடங்கினார். அவர் தலைமை ஏற்ற சில நாள்களிலே "மகாஜன உயர்கலைக் கழகம்" மகாஜனக் கல்லூரி என்று பெயர் மாற்றம் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுதோறும் புதுமைகள் பல புகுத்தப்பட்டன. கட்டடங்கள் பல எழுந்தன. பல்கலைக் கழகப் புகுமுக வகுப்புக்கள் ஆரம்பமாயின. தரத்தில் மிக உயர்ந்தது மகாஜனா. அதிபர் அவர்கள் உயர் தனித்தர அதிபராகப் பதவியேற்றம் பெற்றார். கல்லூரியும் 1961ஆம் ஆண்டில் உயர்தனித் தரத்தைப் பெற்று உயர்ந்தது.

1963ஆம் ஆண்டிலே 38 மாணவர்கள் பல்கலைக் கழகம் புகுந்த ஒரு சிறப்புச் சாதனையும் எட்டு ஆண்டுகள் தொடர்ச்சியாக உதைபந்தாட்ட வெற்றிக்கிண்ணம் பெறவைத்த சாதனையும் ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து நாடகப் போட்டியில் வெற்றியீட்டிய சாதனையும் ஆகிய இவையெல்லாம் அதிபரவர்களது அரிய நிருவாகத் திறமைக்குச் சான்று பகர்வன.

திரு ஜயரத்தினம் அவர்களது இல்லறம் செம்மையுற மலர்ச்சி பெற்றது. "தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" யாக அமைந்த சிறப்பினால் அது புகழ் பெற்றது. 1945ஆம் ஆண்டிலே மங்கல வாழ்வின் நன்கலமாகத் தோன்றிய பெண்மகவுக்கு ஜெயபவானி எனப் பெயரிட்டுப் போற்றினர். அதன்மேல் 1948இல் ஜெயகுமாரனும், 1950இல் ஜெயகாந்தனும் ஆகிய ஆண்மக்கள் தோன்றினர்.

1953இல் ஜெயவாணி என்ற புத்திரியும் பிறந்தாள். நால்வர் மக்களுடன் அதிபர் அவர்கள் இல்லறம் நன்கு மலர்ந்தது.

1957இல் ஆசிரியராக அமர்ந்து 25 ஆண்டுகள் சேவை ஆற்றியமைக்காக நிகழ்த்திய வெள்ளி விழாவை அநுபவித்த அதிபர் அவர்களுக்கு 25ஆண்டு அதிபர்ப் பணிக்குரிய வெள்ளி விழாவை 1970 இல் நடத்திக் கௌரவிக்கக் கல்லூரி சித்தமாகிக்கொண்டிருந்த வேளையில் அவர் இளைப்பாற வேண்டிய நிலை நேர்ந்தது. அதனால் அதிபர் அவர்களுக்குப் பிரிவுபசார விழா நடத்திய கல்லூரியினர் அவரை நீடு வாழ வாழ்த்தி நின்றனர்.

1976ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29ஆம் நாள் வெள்ளிக்கிழமை அதிபர் அமரரானார்.

நன்றி: ஜயரத்தின தீபம், நினைவு மலர், 1976

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைக ளியற்றல்
அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிர நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறி வித்தல்

பாரதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜனா கண்ட இரத்தினம்

வை. பொன்னையா
மகாஜனக் கல்லூரி முன்னாள் கனிட்ட அதிபர்

ஈழத் திருநாட்டில் புகழ்பெற்று விளங்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் சிற்பியென யாவராலும் அன்போடு விதந்து அழைக்கப்படும் அமரர் உயர்திரு தெ.து. ஜயரத்தினம் அவர்களின் பாரியார் திருமதி இராணிரத்தினம் அவர்களுக்கு அன்னாரின் எண்பதாவது அகவையில் இலண்டன் பழைய மாணவர் சங்கத்தினர் நன்றியுணர்வோடு விழாவெடுப்பது அறிந்து மனம் பூரிப்படைகிறது. அரை நூற்றாண்டுக்கு மேலாகக் கல்லூரியின் பல்துறை வளர்ச்சிக்குக் காத்திரமான பங்களிப்பை நல்கிவரும் அம்மையாரின் எண்பதாவது பிறந்த நாள் விழாவையொட்டி வெளிவரும் சிறப்பு மலரில் எனது உள்ளத்தில் உதித்தவற்றை உங்களுடன் பகிர்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.


மகாஜனாவின் வரலாற்றுக் கண்ணோட்டத்தில் மகாஜனக் கல்லூரியையும் மதிப்புக்குரிய அமரர் தெ.து.ஜயரத்தினம் அவர்களின் குடும்பத்தையும் வேறு வேறாகப் பிரித்துப்பார்க்க இயலுவதில்லை. அவ்வளவுக்கு இரண்டும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து (Integral) செயலாற்றி நிற்கும் ஓர் அமைப்பாகவே காண்கிறோம். மகாஜன அதிபர், ஆசிரியர், பழைய மாணவர், பெற்றோர், சிற்றூழியர் யாவரும் சேர்ந்து ஒரு குடும்பமாகவே தொழிற்பட்டு வந்ததை அனைவரும் அறிவர். இதனை வெளியுலகம் பாராட்டிப் பேசியது எமது காதுகளுக்கும் எட்டியது. ஆக, அதிபர் குடும்பத்தினதும் மகாஜனக் குடும்பத்தினதும் சங்கமம்தான் மகாஜனா ஆகும். இரு குடும்பங்களினதும் அயராத - தன்னலமற்ற உழைப்பினாலே மகாஜனா குறுகிய காலத்தில் அதீத வளர்ச்சியைக் காணமுடிந்தது எனின் மிகையில்லை.

1942ஆம் ஆண்டு அதிபர் அவர்கள் அம்மையாரை விவாகம் செய்த காலகட்டத்திலிருந்து கல்லூரியின் வளர்ச்சியில் பல மைல் கற்களைத் தாண்டி வந்தமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. உதவி ஆசிரியராய் இருந்த திரு ஜயரத்தினம் அதிபராகப் பதவி உயர்வு பெற்றதும், மகாஜன உயர்பாடசாலை (Mahajana High School) மகாஜனக் கல்லூரி எனப் பெயர்மாற்றம் பெற்று ஒளி வீசத் தொடங்கியதும், தரம் 3இல் இருந்த கல்லூரி தரம் 2க்கும் இரண்டு ஆண்டுகளில் தரம் 1க்கு உயர்த்தப்பட்டு அரசின் மதிப்பைப் பெற்றதும், அதியுயர் தரத்திற்கு (Super Grade) உயர்த்தப்பட்டதும், T வடிவக் கட்டடம் மேலும் நீட்சியைக் கண்டதும், பாடசாலைக் கட்டட நிதிக்காக யாழ். முற்றவெளியில் நடத்தப்பட்ட களியாட்டு விழா கணிசமான வசூலைப் பெற்றதும், T வடிவிலிருந்த கிடுகினால் வேய்ந்த கட்டடம் துரையப்பா ஞாபகார்த்த மண்டபமாக மாற்றப்படுவதற்கான கால்கோள் எடுக்கப்பட்டதும், கல்லூரியின் பொன்விழா சிறப்புறக் கொண்டாடப்பட்டதும் அதிபர் அவர்கள் அம்மையாரைக் கரம்பிடித்த பதினெட்டு ஆண்டுகளில் நடந்தேறியவை.

இங்ஙனமாக மகாஜனவின் படிமுறை வளர்ச்சியைக் கண்ணுற்ற மற்றைய யாழ் பாடசாலைகள் "மகாஜனாவைப் பாருங்கள்" எனுமளவிற்கு கல்லூரி மேலோங்கி வளர்ந்தது. இக்காலப்பகுதியே மகாஜனாவின் வரலாற்றின் பொற்காலம் எனப் புகழ்ந்துரைக்கப்பட்டது. அதிபர் அவர்களின் கனவு நனவாகப்பெற - சிந்தனை செயலுருப்பெற- இரு களங்களிலிருந்து அதிபருக்கு உறுதுணை உதவுகரங்கள் நீட்டப்பட்டன. ஒன்று பாடசாலை. மற்றையது அதிபரின் இல்லம். அதிபரின் உளத்திலிருந்த உதித்த சிந்தனைகளுக்கு இல்லத்திலிருந்து உறுதுணையாக - உந்து சக்தியாக - இருந்து தொழிற்பட்டவர் எம் அம்மையார் என்பதில் இருவேறு கருத்து இருக்க முடியாது. வருடந்தோறும் கல்லூரியில் நடைபெறும் சகல விழாக்களுக்கும், கல்லூரிக்கு வெளியே நடைபெறும் கல்லூரி தொடர்பான பிற முயற்சிகட்கும் நிகழ்ச்சிகட்கும் குடும்ப அங்கத்தவரின் பங்களிப்பு இருந்தே தீரும். அவற்றுள்ளும் அம்மையார் பங்கேற்காத விழாக்களோ நிகழ்ச்சிகளோ இல்லையெனலாம்.

1954ஆம் ஆண்டு யாழ் முற்றவெளியில் நடைபெற்ற களியாட்டவிழாக் காலத்தில் அதிபரின் அன்புக்குரிய தாயாரின் திடீர் மறைவு அதிபருக்குத் தாங்கொணாத் தாக்கத்தை ஏற்படுத்தியது. அப்போது ஆசிரியர், பெற்றோர், தெல்லிப்பழை மக்கள் எல்லோர்க்கும் மேலாக அம்மையார் ஆறுதல் அளித்து நல்கிய தைரியம் ஒருவாறு செயலாற்றும் மனோதிடத்தை அதிபருக்கு அளித்தது. 1970ஆம் ஆண்டு திடீரெனக் கல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதல்வி ஜெயவாணி மகேஸ்வரன் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலாகாவால் இயற்றப்பட்ட இளைப்பாற்றுச் சட்டத்தின் பிரகாரம் அவ்வாண்டு அதிபர் முதிர்வுக்கு முந்திய இளைப்பாறுதலுக்கு ஆளானார். கல்லூரியின் வளர்ச்சியில் ஆட்டம் காணப்பட்டது. இந்நிலையில் அதிபர் வெகுவாகப் பாதிப்புக்குள்ளானார். முன்பு உடனாசிரியராக இருந்த திரு பொ கனகசபாபதி அவர்கள் அதிபராக இடமாற்றம் பெற்று மகாஜனாவுக்கு வந்ததால் ஓரளவு தாக்கத்திலிருந்து விடுபட்டாலும் முற்றாக விடுபடவில்லை. திரு கனகசபாபதி அதிபர் பதவியில் நீடித்திருக்காது ஓய்வு பெற்றுவிடுவார் என்பதை அதிபர் தீர்க்க தரிசனத்தால் அறிந்திருந்தார்போலும். அதிபரின் மன இருளைப் போக்க அம்மையார் அளித்த ஆக்கமும் ஊக்கமும் அளப்பில. 1976ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 29ஆம் திகதி மகாஜனாவின் வரலாற்றில் சோகம் படிந்த நாள். தன் குடும்பத்தையும் மகாஜனக் குடும்பத்தையும் தெல்லிப்பழை மக்களையும் துக்கசாகரத்தில் ஆழ்த்தி அதிபர் விண்ணுலகு எய்தினர். ஈடு செய்யமுடியாத இழப்பால் ஏற்பட்ட தாக்கத்திலிருந்து அம்மையார் விடுபடமுடியாது தவித்தார். அவருக்கு இத்தாக்கம் இன்னமும் இருந்துகொண்டே இருக்கிறது.

அம்மையார் தம் வாழ்வில் கடைப்பிடித்த இலட்சிய வாழ்வை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அன்னார் ஒரு செல்வந்த வாழ்க்கையை வாழ்ந்திருக்கலாம். அங்ஙனம் வாழாது - வாழ விரும்பாது- வளர்ந்துவரும் ஒரு கல்லூரிக்கு அதிபருடன் சேர்ந்து, மக்கள் (மகாஜன) கல்லூரி மக்களுக்கே உதவ, தன்னையும் அர்ப்பணித்த நங்கையின் பற்றற்ற, தூய நிலை நம்மாற் சிந்திக்கவும் முடியாததொன்று. மகாஜனாவின் வளர்ச்சியே தம் வளர்ச்சி, மகாஜனாவின் வெற்றியே தம் வெற்றி, மகாஜன அணங்கின் அலங்காரமே தம் அலங்காரமென்று இவ்வாறாகப் பொன்னும் பொருளும் போகமும் வேண்டாத பொற்கொடியாகத் திகழும் அம்மையாரை மகாஜனா கண்ட இரத்தினம் எனப் போற்றுவது சாலவும் பொருந்தும்.

ஆயிரம் பிறைகண்ட அம்மையார் இன்னும் பல்லாண்டு சுகத்துடன் வாழ எல்லாம் வல்ல சிவகாமி சமேத ஆனந்தநடராஜப் பெருமானின் குஞ்சிதபாத மலர்களை வாழ்த்தி வணங்குகிறேன்.

## இம் மலர் மலர உதவியவர்கள்:

திரு வ. இ. இராமநாதன்
திரு அ. சிறீகாந்தலிங்கம்
திரு நா. சிறீரெங்கநாதன்
திரு கிருஷ்ணா ஜெகதீசன்
திரு ப. வை. ஜெயபாலன்
திரு வை. தயாளன்
திரு ஜி நற்குணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best wishes
from

Children of
Mr and Mrs Ganapathipillai
of Alaveddy

Santhiran
Satgunan
Sarojini
Natkunan
Gunapoopathy
Uthamakunan

Best wishes to
Mrs Rani Jayaratnam

A Happy 80th Birthday
and Long Life

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லகதீபம் - இராணிரத்தினம்

உலகெல்லாம் போற்றும் மகாஜனா என்னும்
அறிவா லயத்தை ஆக்கிய சிற்பி
துரையப் பாபிள்ளை செய்தவம் ஆகிய
ஜயரத் தினம்எனும் பேரறி வாளன்!
மகாஜனத் தாயின் வளர்ச்சிக் கென்றே
மண்ணிடைப் பிறந்த புண்ணிய வாளன்!
ஊருணி என்றும் கனிமரம் என்றும்
உயர்ஒளி படைக்கும் விளக்கே என்றும்
அவனைக் கூறல் சாலப் பொருந்தும்!

ஞாலம் வியக்கப் பெரும்பணி புரிந்த
அப்பெரு மகனின் அருந்துணை யாகிய
ஒப்பில் மணியே இராணி ரத்தினம்

தற்காத் திருதல் தற்கொண்டாற் பேணுதல்
சொற்காத் திருதல் மக்களை வளர்த்தல்
விருந்தினர்ப் போற்றல் அறம் காத்தல்
அரும்பணி அனைத்தும் அழகுற முடித்தல்
இராணிரத் தினத்தின் இயல்புக ளாகும்

துணைவன் பொதுப்பணி துலங்கிடத் துணையாய்
இருந்தவர் ஆவார் இராணி ரத்தினம்
மகாஜனத் தாயின் மக்கட் கெல்லாம்
தெய்வம் இரண்டே! ஜயரத் தினமும்
இராணிரத் தினமும் என்றும் நெஞ்சில்
ஒளிசெய் கின்ற தெய்வம் ஆமே!

புலவர் ம. பார்வதிநாதசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org